## 11 – ஆம் வகுப்பு
## வணிகவியல்
## முழு ஆண்டுத் தேர்வு மார்ச் - 2024
### உத்தேச விடைக்குறிப்புகள்
### பகுதி-I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20X1=20

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

| A TYPE | B TYPE |
|---|---|
| 1. அ) அமைப்பு முறையேடு | 1. ஈ) நேரடி வரி |
| 2. ஈ) நேரடி வரி | 2. ஆ) வழிச்சீட்டு |
| 3. ஆ) வியாபாரம் | 3. இ) 14 |
| 4. ஆ) வழிச்சீட்டு | 4. ஆ) கிராம சேமிப்பு |
| 5. ஆ) பன்னாட்டு வியாபாரம் | 5. இ) 51% |
| 6. இ) ஒப்பந்தத்திற்கு மூன்றாம் நபர் | 6. அ) ₹ 2 லட்சம் |
| 7. அ) ₹ 2 லட்சம் | 7. ஆ) மொத்த வியாபாரி |
| 8. ஆ) மொத்த வியாபாரி | 8. அ) அமைப்பு முறையேடு |
| 9. ஆ) ஒப்பந்தத்தால் | 9. ஆ) பன்னாட்டு வியாபாரம் |
| 10. இ) நடைபாதை வியாபாரிகள் | 10. ஆ) வியாபாரம் |
| 11. ஆ) கிராம சேமிப்பு | 11. ஆ) ராபர்ட் ஓவன் |
| 12. இ) 51% | 12. ஈ) (1)-(ii), (2)- iv), (3)-(i), (4)- (iii) |
| 13. ஆ) வழங்கல் | 13. ஆ) ஒப்பந்தத்தால் |
| 14. ஈ) அந்நிய செலாவணி மாற்று பத்திரம் | 14. ஈ) உரிமையாளர்கள் |
| 15. ஈ) உரிமையாளர்கள் | 15. ஈ) செலவு குறைப்பு |
| 16. ஈ) (1)-(ii), (2)- iv), (3)-(i), (4)- (iii) | 16. அ) 3 |
| 17. ஈ) செலவு குறைப்பு | 17. இ) ஒப்பந்தத்திற்கு மூன்றாம் நபர் |
| 18. அ) 3 | 18. ஆ) வழங்கல் |
| 19. ஆ) ராபர்ட் ஓவன் | 19. இ) நடைபாதை வியாபாரிகள் |
| 20. இ) 14 | 20. ஈ) அந்நிய செலாவணி மாற்று பத்திரம் |

### பகுதி- II

எதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

இவற்றில் வினா எண் 30- க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 7X2=14

**21. போக்குவரத்து - வரையறு.**

**கே.கே.செக்சேனா** அவர்கள் "ஒரு இருட்டறையில் மெழுகுவர்த்தியின் ஒளி பரவுவது போல போக்குவரத்து அந்தந்த பகுதிகளில் தனது பணியை செய்கிறது" என்று வரைவிலக்கணம் தந்துள்ளார்.

**22. கூட்டுரு சாரா நிறுவனங்கள் யாவை?**

1. தனியாள் வணிகம் 2. கூட்டாண்மை நிறுவனம் 3. இந்து கூட்டுக் குடும்பம்

**23. நிறுமத்தின் ஏதேனும் இரண்டு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.**

**1. தனியான சட்ட நபர் தன்மையுடையது**

நிறுமம் என்பது உறுப்பினர்களிடமிருந்து வேறுபட்டுத் சட்டத்தின் கண்களில் ஒரு செயற்கை நபராக தனி நபர் தன்மையுடன் விளங்குகிறது.

**2. வரையறு பொறுப்பு:**

பங்குதாரர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. ஒவ்வொரு பங்குதாரர்களின் பொறுப்பும் அவர் வைத்துள்ள பங்குகளின் செலுத்தப்படாத தொகைக்கு மட்டுமே வரையறை செய்யப்பட்டுள்ளது.

**3. நீடித்த வாழ்வு:**

பங்குதாரர்களின் நொடிப்பு நிலை, செயல் திறன் இழப்பு, மனச்சம நிலை இழப்பு போன்ற நிகழ்வுகள் நிறுமத்தின் ஆயுளை பாதிக்காது.

**4. பங்குகளின் மாற்றியல்பு:**

பொது நிறுமங்களின் பங்குகளை மாற்றுவது எளிதானது. தேவைப்படும் பொழுது பங்குகளை விற்கலாம்.

**5. பொது முத்திரை:**

நிறுமத்தின் பொது முத்திரையே அங்கீகரிக்கப்பட்ட அலுவலக கையெழுத்தாகும். நிறுமத்தின் பெயரையே பொது முத்திரையாக செதுக்கப்பட்டுள்ளது.

**24. பன்னாட்டு நிறுமத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.**

1. பாட்டா 2. கோல்கேட் பாமோலிவ் 3. சோனி கார்ப்பரேசன்
4. சுசூகி 5. டைமெக்ஸ்.

**25. துறைவாரிப் அமைப்புகளின் தன்மைகள் ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.**

**1. பேரளவு அமைப்பு**

அதிக முதலீடு செய்து உருவாக்கப்பட்ட கூட்டுப் பங்கு நிறுமத்தின் இயக்குநர்கள் குழுவால் நிர்வகிக்கப்படும் பெரிய சில்லறை வியாபார நிறுவனம் துறைவாரிப் பண்டகசாலை ஆகும்.

**2. பல்பொருள் விற்பனை**

மனிதனுக்கு தேவையான அனைத்து வகை பொருட்களும் ஒரே இடத்தில் 'குண்டூசி முதல் வாகனம் வரை' விற்பனை செய்யப்படுவதால் நுகர்வோர் வேண்டியதை வாங்கிப் பயன் பெற முடியும்.

**3. துறைகளின் ஒருங்கிணைப்பு**

பல்வேறு துறைகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு வகையான பொருட்களை தனித்தனியாக விற்பனை செய்யப்படுகின்றன.

**4. வாங்கும் வசதிகள்**

வாடிக்கையாளர்களுக்கு ஓய்வறைகள், சிற்றுண்டிச் சாலை, வாகனம் நிறுத்துமிடம், பொழுதுபோக்கு வசதிகள் போன்ற வசதிகள் வழங்கப்படுவதால் குடும்பமாக வந்து பொருட்களை வாங்க முடிகிறது.

**5. மையக் கொள்முதல்**

அனைத்து வகை பொருள்களும் ஒரு மையத்தின் மூலம் நேரடியாகத் தயாரிப்பாளிடமிருந்து பேரளகு கொள்முதல் செய்யப்படுகிறது.

**26. இருதரப்பு வாக்குறுதிகள் என்றால் என்ன?**

ஒரு நபர் தனது வாக்குறுதியை மற்றவரின் வாக்குறுதிக்கு மறு பயனாக அளிக்கும்பொழுது, அவ்விரு வாக்குறுதிகளும் இருதரப்பு வாக்குறுதிகள் என அழைக்கப்படுகிறன.

**27. வாணிப சமநிலை என்றால் என்ன?**

வாணிபச் சமநிலை என்பது ஒரு வருடத்தில், ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவைக் குறிக்கும்.

**28. சரக்காணையின் வகைகளைக் குறிப்பிடுக.**

சரக்காணை மூன்று வகைப்படும்

1. வெளிப்படை சரக்காணை
2. வரையறுக்கப்பட்ட சரக்காணை
3. உறுதி செய்யும் சரக்காணை

**29. உலகளாவிய வைப்பு இரசீது என்றால் என்ன?**

அந்நிய நாட்டு முதலீட்டாளரிடமிருந்து நிதி திரட்டும் நோக்குடன், அந்நிய செலாவணியில், வெளிநாட்டில் வெளியிடப்படும் ஒரு மாற்று முறை ஆவணமே உலகளாவிய வைப்பு இரசீது எனப்படும்.

**30. தூயக்கடன் என்றால் என்ன?**

தூய / பிணையமற்ற கடன் என்பது எவ்விதமான பிணையங்களையும் ஈடாகப் பெறாமல் கடன் பெறுநரின் குணநலன்கள், திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் அவரின் செயல் திறமை ஆகியவற்றின் அடிப்படையில் தரப்படுவதாகும்.

## பகுதி- III

**எதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**இவற்றில் வினா எண் 40- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7X3=21**

**31. வீட்டு வசதி கூட்டுறவு பற்றி சிறு குறிப்பு வரைக.**

உறுப்பினர்களுக்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ வீடுகளை பெற்றுத் தரும் சங்கங்களே வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் எனப்படுகின்றன. சொந்தமாக வீடு கட்ட விழையும் அன்பர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வீடுகட்ட கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுகின்றனர்.

**32. கப்பல் வாடகை ஒப்பாவணம் என்றால் என்ன?**

பெரிய அளவிலான பொருட்கள் ஒதுக்கப்படும் போது கப்பல் முழுவதையும் அல்லது கணிசமான பகுதியை வாடகைக்கு எடுத்துக் கொள்வது நல்லது. எந்த வகையான ஆவணத்தின் மூலம் ஒப்பந்தம் உருவாக்கப்படுகிறதோ அது கப்பல் வாடகை ஒப்பாவணம் என்று அழைக்கப்படும். மேலும் இது பயண ஒப்பந்தம் அல்லது கால ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படும்.

**33. தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளைப் பட்டியலிடுக.**

| | |
|---|---|
| 1. ஜவுளி | 5. தோல் பொருட்கள் |
| 2. மின்னணு பொருட்கள் | 6. இரசாயனம் |
| 3. பொறியியல் பொருட்கள் | 7. நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்கள் |
| 4. தானியங்கி உதவிப்பொருட்கள் | 8. ஆயத்த ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் |

**34. தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (NEFT) விளக்குக.**

இது 2005 - இல் இந்திய ரிசர்வ் வங்கியால் தொடங்கப்பட்டது. இந்த மின்னணு நிதி பரிமாற்றத்தின் கீழ் மொத்த நிதி பரிமாற்ற நடவடிக்கைகள் தொகுப்புகளாக்கப்பட்டு, குறிப்பிட்ட நேரங்களில் இந்தியா முழுவதும் தீர்க்கப்படுகின்றன. NEFT செயல்படுத்தப்பட்ட கிளை வங்கிகளில் கணக்குகளை பராமரிக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் NEFT முறையை பயன்படுத்தத் தகுதியுடையவையாகும். பரிவர்த்தனைகள் உண்மையான நேர அடிப்படையில் நடைபெறுவது இல்லை. ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும் காலை 8.00 மணியிலிருந்து இரவு 7:30 மணி முடிய 23 தீர்வுகள் மட்டுமே ஒரு நாளில் அனுமதிக்கப்படுகின்றன. ஞாயிற்றுக்கிழமைகளில் மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் அனுமதிக்கப்படுவதில்லை.

**35. மொத்த வியாபாரிகளின் பண்பு நலன்கள் ஏதேனும் மூன்றினை எழுதுக.**

1. மொத்த வியாபாரிகள் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்குகின்றனர்.
2. மொத்த வியாபாரிகள் பொருட்களை மொத்தமாக வாங்கிச் சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர்.
3. மொத்த வியாபாரிகள் ஒரு குறிப்பிட்ட பொருளின் பல்வேறு வகைகளை விற்பனை செய்கின்றனர்.
4. பொருட்களை விநியோகம் செய்ய முகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர்.

**36. அடகுக் கடன் என்றால் என்ன?**

கடன் பெறுநர் அவசர நிதித் தேவையை பூர்த்தி செய்து கொள்ள தனக்குச் சொந்தமானப் பொருளை கடன் வழங்கிநரிடம் அடகு வைத்து கடன் பெறுவார். இதனையே அடகுக் கடன் என்றழைக்கின்றனர்.

**37. உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் ஏதேனும் மூன்றினை எழுதுக.**

1. ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டே வாங்குதல், விற்றல் நடவடிக்கைகள் இடம் பெறும்.
2. உள்நாட்டு பண மதிப்பு அடிப்படையில் பண பரிமாற்றம் நடைபெறும்.
3. போக்குவரத்து இடர்பாடு பன்னாட்டு வணிகத்தை விட குறைவாகவே உள்ளது.
4. இதில் உள்நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மட்டுமே பின்பற்றப்படும்.
5. இதன் நோக்கம் அத்தியாவசிய பொருட்களை சிக்கனமாக வழங்குவது ஆகும்.
6. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மட்டுமே இடம்பெறும்.
7. உள்நாட்டு போக்குவரத்து சாதனங்கள் மூலம் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது.
8. இதில் சுங்கவரி இறக்குமதி வரி போன்றவை இடம் பெறுவதில்லை.

**38. வணிகம் பொருள் தருக.**

பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்ட இடத்திலிருந்து நுகரும் இடத்திற்கு கொண்டு சேர்ப்பதற்கான அனைத்து செயல்பாடுகளையும் உள்ளடக்கியதே வணிகம் எனப்படுகிறது.

**39. நேரடி வரிக்கும் மறைமுக வரிக்கும் உள்ள வேறுபடுகள் தருக. (ஏதேனும் 3)**

| அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| **1. பொருள்** | ஒரு நபரின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது வரி விதிக்கப்பட்டு அந்த நபரே அரசிடம் நேரடியாக செலுத்தப்படுவது. | சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது வரி விதிக்கப்பட்டு, அவ்வரி பிறரால் (விற்பனையாளர்) அரசிடம் மறைமுகமாகசெலுத்தப்படுவது |
| **2. வரி நிலைப்பாடு மற்றும் வரித்தாக்கம்** | மதிப்பீட்டிற்குரியவர் மீது சுமத்தப்பட்டு வசூலிக்கப்படுகிறது. | நுகர்வோர் மீது சுமத்தப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு ஆனால் மதிப்பீட்டிற்குரியவரால் செலுத்தப்படுகிறது. |
| **3. ஏய்ப்பு** | வரி ஏய்ப்புக்கான வாய்ப்புகள் உண்டு. | வரி ஏய்ப்புக்கான வாய்ப்பு குறைவு |
| **4. பணவீக்கம்** | நேர்முக வரி பணவீக்கத்தைக் குறைக்க உதவுகிறது. | மறைமுக வரி பணவீக்கத்தை ஊக்குவிக்கிறது. |
| **5. மாற்றுதல்** | மாற்ற முடியாது | மாற்ற முடியும். |
| **6.உதாரணங்கள்** | சொத்துவரி, வருமானவரி | சரக்கு மற்றும் சேவை வரி, உற்பத்தி வரி |

**40. கப்பல் இரசீதின் உள்ளடக்கங்கள் யாவை?**

கப்பல் இரசீதின் உள்ளடக்கங்கள்:

1. ஏற்றுமதி செய்பவர் பெயர்.
2. கப்பல் பெயர்.
3. பொருட்களை ஏற்றும் இடம்.
4. கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்களின் விவரங்கள்.
5. இறக்க வேண்டிய துறைமுகத்தின் பெயர்.
6. சரக்குகள் வழங்கப்படும் அல்லது செலுத்தப்பட வேண்டிய பொருட்கள்.
7. யாருக்காக பொருட்கள் ஏற்றப்பட்டதோ, தேதி வாரியாக ஒப்படைத்தல் போன்றவை அதில் இடம்பெற்றிருக்கும்.

**பகுதி-IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **7X5=35**

**41. அ ) துறைவாரி நிறுவனங்களின் நன்மைகள் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும்.**

**1. வாங்கும் வசதிகள்:**

தேவையான பொருட்களை வாங்க வெவ்வேறு இடங்களுக்குச் செல்லாமல் ஒரே இடத்தில் ஒரே கூரையின் கீழ் அனைத்தையும் வாங்கிக் கொள்ளலாம். நேரமும், உழைப்பும் மிச்சப்படுத்தப்படுகின்றன.

**2. மகிழ்வுடன் வாங்குதல்:**

ஓய்வறைகள், உணவகங்கள், குழந்தைகள் விளையாட்டு வசதிகள் முதலியவை இங்கு இருப்பதால் மகிழ்வுடனும் மன நிறைவுடனும் வாடிக்கையாளர்கள் பொருட்கள் வாங்க முடிகிறது.

**3. மைய இடஅமைவு:**

பொதுவாக துறைவாரிப் பண்டகச் சாலை நகரின் மையப்பகுதியில்தான் அமைந்திருக்கும். ஆகவே, நகரின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும், பிற ஊர்களிலிருந்தும் நுகர்வோர் எளிதாக வந்து செல்லும் வசதியைத் தருகிறது.

**4. இடைநிலையர்கள் நீக்கம்:**

தயாரிப்பாளிடமிருந்து பொருட்களை நேரடியாக, கொள்முதல் செய்து சொந்த பண்டக காப்பகங்களில் சேர்த்து வைத்து விற்பனைசெய்வதால் முகவர்கள் மற்றும் மொத்த வியாபாரிகள் உள்ளிட்ட இடைநிலையர்கள் தவிர்க்கப்படுகின்றனர். அதனால் விலை குறைவாக தரமான பொருட்களை வாங்க முடிகிறது.

**5. பேரளவால் உண்டாகும் சிக்கனங்கள்:**

தேர்ந்த வல்லநர்களைக் கொண்டு பேரளவு கொள்முதல், விற்பனை, கணக்கு பராமரித்தல்,நிர்வாகம் செய்யப்படுவதால் எல்லா நன்மைகளும் கிடைக்கின்றன.

**(அல்லது)**

**ஆ) ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.**

**1. பொது வருங்கால வைப்பு நிதி**

இந்தியாவில் உள்ள மிகச்சிறந்த முதலீட்டு வாய்ப்புகளில் இது மிக பாதுகாப்பான நீண்ட கால முதலீட்டு வாய்ப்பாகும். இதற்கு முழுமையான வருமான வரி விலக்கு உண்டு. இந்த வருங்கால வைப்பு நிதி கணக்கை வங்கி அல்லது அஞ்சலகத்தில் ஆரம்பிக்கலாம். இதில் செலுத்தப்படும் தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பாக திரும்ப பெற முடியாது.

**2. நேரடி சம உரிமை பங்குகள் (அல்லது) பங்கு கொள்முதல்**

தனிநபர் பங்குகளில் முதலீடு செய்யும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு செய்யும் முன்பாக பங்கு மாற்றகங்கள் வாயிலாக விற்கப்படும் பங்குகளைக் குறித்து சில செய்திகளை ஆராய்ந்து அறிதல் மிக அவசியம்.

**3. அசையாச் சொத்தில் முதலீடு செய்தல்**

அசையா சொத்தின் முதலீடு செய்தல் என்பது இந்தியாவில் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் முதலீட்டு துறையாகும். ஒரு வீட்டுமனை(Plot) அல்லது அடுக்குமாடி குடியிருப்பு (Flat) வாங்குவது என்பது மிகச் சிறந்த தனி மனித முதலீட்டு முறையில் ஒன்றாக விளங்குகிறது.

**4. விலை உயர்ந்த உலோகங்களில் முதலீடு செய்தல்**

தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற உலோகங்களில் முதலீடு செய்வது என்பது மிகப் பழமையான மற்றும் எக்காலத்திற்கும் ஏற்ற முதலீட்டு வழிகளில் ஒன்றாகும். சந்தை நிலைக்கேற்றாற்போல் உலோகங்களின் மதிப்பு மெதுவாக ஆனால் உறுதியாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இவ்வகை முதலீட்டில் முதலீட்டாளர்கள் எந்தவித நட்டமும் இல்லாமல் அவற்றை உடனடியாக பணமாக மாற்றிக் கொள்ள இயலும்.

**5. அஞ்சலக சேமிப்பு திட்டங்கள்**

1. அஞ்சலக சேமிப்பு கணக்கு 2. அஞ்சலக தொடர் வைப்புக் கணக்கு 3. அஞ்சலக நிலை வைப்புக் கணக்கு 4. அஞ்சலக மாதாந்திர வருவாய் கணக்கு திட்டம்
5. மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம் 6. பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு
7. தேசிய சேமிப்பு பத்திரங்கள் 8. கிசான் விகாஸ் பத்திரங்கள்
9. சுகன்யா சம்ரித்தி கணக்கு போன்றவற்றில் முதலீடு செய்து பயன்பெறலாம்.

**6. வங்கி வைப்புகள்**

வங்கிகளில் நிலை வைப்பு, தொடர் வைப்பு செய்வதன் மூலம் தனி நபர்கள் தங்களுடைய முதலீட்டினை சேமித்து வைக்கலாம்.

**42. அ) உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை (ஏதேனும் 5)**

| அடிப்படை | உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|---|
| **1. பொருள்** | ஒரு நாட்டின் எல்லைக்குள்ளே நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். | நாடுகளின் எல்லைகளைத் தாண்டி நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். |
| **2. வியாபாரத்தில் பங்கு பெறுவோர்** | ஒரு நாட்டில் உள்ள மக்களும் நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். | ஒரு நாட்டின் எல்லையை தாண்டி உள்ள மக்களும் நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். |
| **3. நாணய மதிப்பு** | உள்ளூர் நாணய மதிப்பில் வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. | அயல்நாட்டு நாணய மதிப்பில் வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. |
| **5. போக்குவரத்து** | சாலை மற்றும் இரயில் போக்குவரத்து மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. | பன்னாட்டு வணிகத்தில் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து பயன்படுத்தப்படுகிறது. |
| **4. இடர்** | இடரின் அளவு குறைவு. | இடர் அதிகமாகிறது. |
| **5. சந்தையின் அளவு** | சந்தையின் அளவு நாட்டின் எல்லைக்குட்பட்டது. | சந்தையின் அளவு பரந்த அளவில் நாட்டின் எல்லைகளைக் கடந்து செல்கிறது. |

**(அல்லது)**

**ஆ) அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரத்தின் ஏதேனும் ஐந்து சிறப்பியல்புகளை விவரி.**

1. அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரம் என்பது இந்திய நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியில் வெளியிடும் ஒரு வகை பத்திரம் ஆகும்.
2. இவை கடனீட்டுப் பத்திரங்களைப்போல பட்டியலிடப்பட்டு அயல்நாட்டு பங்கு மாற்றகங்களில் வியாபாரம் செய்யப்படுகின்றன.
3. இது மாற்றத்தக்க கடன் ஆவணமாகும்.இதனுடன் வட்டிக்கான அனுமதி உரிமை ஆணை இணைந்திருக்கும்.
4. இதனை வைத்திருப்பவர்களுக்கு முன்குறித்த விலையில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பங்குகளாக மாற்றிக் கொள்ளவும் உரிமை தரப்பட்டுகிறது.
5. குறிப்பிட்ட காலத்துக்கு பின் இவைகளை நேர்மை பங்குகளாகவோ அல்லது வைப்பு இரசீதாகவோ மாற்றிக் கொள்ள முடியும்.
6. இந்த பத்திரம் மூலம் பெறப்படும் நிதியை வெளிப்புற வணிகக் கடன் (External Commercial Borrowing) தொடர்பாக இயற்றப்பட்டுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைப்படியே பயன்படுத்தப்பட வேண்டும்.

**43. அ) காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி (ஏதேனும் 5)**

**1. மிக்க நம்பிக்கை:**
இக்கோட்பாட்டின்படி, காப்பீடு தருநர் மற்றும் காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர். காப்பீடு பெறுநர் கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநருக்கு தெரியப்படுத்திட வேண்டும்.

**2. காப்பீடு பெருநலன்:**
காப்பீடு பெருநருக்கு காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது காப்பீடு பெறுநலன் இருக்க வேண்டும். காப்பீடு பெருநலன் என்பது காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது நிதி சார்ந்த அக்கறை இருத்தலைக் குறிக்கிறது.

**3. ஈட்டுறுதி:**
ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும். காப்பீடு பெறுநருக்கு உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டதோ அந்த இழப்புக்கு ஈடான தொகை மட்டுமே இழப்பீடாக அளிக்க வேண்டும். இழப்பை விட கூடுதலான தொகை வழங்கப்படாது. காப்பீட்டின் மூலம் காப்பீடு பெறுநர் ஆதாயம் எதுவும் அடைந்து விடக்கூடாது என்பதே இத்தத்துவம் ஆகும்.

**4. அண்மைக் காரணம்:**
ஒரு இழப்பு ஏற்பட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின் அதற்குரிய அண்மை காரணம் எதுவென காண வேண்டியதை பற்றி குறிப்பிடுவது இக்கோட்பாடு ஆகும். இடர் ஏற்படுவதற்கு எது மிக முக்கிய காரணம் என்று கண்டறிந்து அக்காரணம் காப்பீடு ஒப்பந்தத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும்.

**5. பகிர்ந்து அளித்தல்:**
ஒரே கருப்பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு "இரட்டைக் காப்பீடு" என்று பெயர். காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள் அவரவர் செய்திருக்கின்ற காப்பீட்டு ஒப்பந்த தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் அவரவர்களுக்குள்ள பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும்.

**6. பகர உரிமை:**

பகர உரிமை என்பது ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை காப்பீடு தருநர் ஈடு செய்த பின் காப்பீடு பெறுநர் தனக்குள்ள உரிமைகளை காப்பீட்டு தருநருக்கு மாற்றிக் கொடுப்பது ஆகும். காப்பீடு பெறுநர் தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பை காட்டிலும் கூடுதலாக ஆதாயம் அடைந்து விடக்கூடாது.

**7. இழப்பை மட்டுப்படுத்தல்:**

காப்பீடு பெறுநர் காப்பீடு செய்த கருப்பொருளுக்கு விபத்து ஏற்படும்போது காப்பீடு தருநருக்கு ஏற்படும் இழப்பை குறைக்கும் அல்லது மட்டுப்படுத்தும் வண்ணம் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**(அல்லது)**

**ஆ) வருமானம் என்ற சொல்லில் அடங்கியுள்ளவை யாவை?**

1. வியாபாரம் அல்லது தொழிலில் ஏற்பட்ட இலாபம் மற்றும் ஆதாயம்
2. பங்காதாயம்
3. தொண்டு நிறுவனங்கள் அல்லது அறக்கட்டளைகள் மருத்துவமனைகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள் பெரும் நன்கொடைகள்.
4. ஊதியத்திற்கு மாற்றாக பெரும் இதர வருமானங்கள்
5. ஏற்றுமதிக்காக வழங்கப்படும் பல்வேறு விதமான ஊக்க தொகைகள்.
6. கூட்டாளி ஒருவர் கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து பெரும் வட்டி, ஊதியம், ஊக்கத்தொகை, கழிவு அல்லது மேல்வருமானம்
7. மூலதன ஆதாயங்கள்.
8. குதிரைப் பந்தயம், சீட்டு விளையாட்டுகள் மற்றும் அதே வகையான ஏனைய விளையாட்டுகள் உள்ளிட்ட பந்தயங்கள்.
9. கருதப்பட்ட வருமானங்கள்.
10. பிரிவு 56(2) (vi) இன் படி பெறப்பட்ட நன்கொடை.

**44. அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை வகைப்படுத்துக (ஏதேனும் 5)**

**<u>1. தலைமை மற்றும் மேற்பார்வை பணிகள்:</u>**

**1. உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி:**

டிசம்பர் 27, 1945 முதல் இந்திய அரசின் பிரதிநிதியாக இந்திய ரிசர்வ் வங்கி இருந்து வருகிறது.

**2. இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்:**

வணிக வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல், கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் போன்ற அதிகாரிகளை ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது.

**3. பணவியல் உச்ச நிலை அதிகாரி:**

நாட்டின் பணவியல் கொள்கையை இந்திய ரிசர்வ் வங்கி நிர்மாணிக்கிறது.

**<u>2. பாரம்பரியப் பணி:</u>**

**1. அரசின் வங்கியர் மற்றும் நிதி ஆலோசகராக செயல்படுதல்:**

இந்திய ரிசர்வ் வங்கி மத்திய மற்றும் மாநில அரசுகளின் கணக்கில் பணத்தை ஏற்றுக் கொள்வதோடு அவர்கள் சார்பாக பணம் செலுத்தும் பணிகளையும் செய்கிறது.

**2. ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவதில் முற்றுரிமை:**
ஒரு ரூபாய் நோட்டு தவிர அனைத்து ரூபாய் நோட்டுகளை அச்சிடுவதற்கும் மற்றும் வெளியிடுவதற்கும் இந்தியாவில் முழு அதிகாரமும் இந்திய ரிசர்வ் வங்கியிடம் உள்ளது.

**3. வங்கியர்களின் வங்கியர்:**
ரிசர்வ் வங்கிக்கும் பிற வங்கிகளுக்கும் இடையேயான உறவு ஒரு வர்த்தக வங்கி அதன் வாடிக்கையாளருடன் வைத்துள்ள உறவைப் போலவே உள்ளது. நாட்டின் அனைத்து வணிக வங்கிகளின் நடப்பு கணக்குகளை ரிசர்வ் வங்கி நிர்வாகிக்கிறது.

**4. கடன் மற்றும் பணப்புழக்கத்தின் கட்டுப்பாட்டாளர்:**
நாட்டின் கடன் பணம் மற்றும் ரூபாய் பணப்புழக்கத்தின் அளவை கட்டுப்படுத்துவது மற்றும் வட்டி விகிதத்தினை நிர்வாகம் செய்வது இந்திய ரிசர்வ் வங்கியின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்று ஆகும்.

**5. இறுதிநிலை கடன் ஈவோர்.**
அவசர கால நேரங்களில் இந்தியாவில் எந்த ஒரு வங்கியும் நிதி உதவியைப் பெற இந்திய ரிசர்வ் வங்கியினை அணுகும் போது ரிசர்வ் வங்கி கடன்களை வழங்குகிறது.

**6. அந்நிய செலாவணி இருப்புகளின் பாதுகாப்பாளர்:**
தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களின் இருப்புகளை இந்திய ரிசர்வ் வங்கி பராமரிக்கிறது.

**3. மேம்பாட்டு பணிகள்:**

**1. பொதுமக்களிடையே வங்கிப் பழக்கத்தை வளர்ப்பது:**
வங்கி முறையின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை பேணி காப்பது இந்திய ரிசர்வ் வங்கியின் பொறுப்பாகும்.

**2. குறை தீர்வு நடவடிக்கைகள்:**
வாடிக்கையாளரின் புகார்களை தீர்ப்பதற்கு விரைவான மற்றும் குறைந்த செலவில் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

**3. வேளாண்மை வளர்ச்சி:**
வேளாண்மை தொழில் இந்திய ரிசர்வ் வங்கியிடம் முற்றுமை பெற்ற பிரிவாக கருதப்படுகிறது.

**(அல்லது)**

**ஆ) முத்ரா வங்கி- விளக்குக.**

1. Micro Unit Development & Refinance Agency Ltd என்பதன் சுருக்கமே MUDRA என்பதாகும்.
2. குறுந் தொழில் பிரிவுகள் வளர்ச்சி மற்றும் மறு நிதி அளிப்பு முகமை என்பதனையே முத்ரா வங்கி என்றழைக்கப்படுகிறது..
3. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், புதிய தொழில் தொடங்குபவர்கள் சந்திக்கும் நிதி பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் ₹ 20 ஆயிரம் கோடி முதலீட்டுடன் ₹ 3 ஆயிரம் கோடி கடன் உத்தரவாத நிதியுடனும் மத்திய அரசால் குறுந்தொழில் பிரிவுகள் வளர்ச்சி மற்றும் மறு நிதி அளிப்பு முகமை (முத்ரா வங்கி) தொடங்கப்பட்டது.
4. குறும் தொழில் முனைவோர் தங்களின் புதிய தொழிலை தொடங்க நிதி உதவி அளிக்கிறது.

5. தொழிலை மேம்படுத்தும் நிலையில் நிதி நாடுவோர், தொழிலை மேம்படுத்த நிதி உதவி அளிக்கிறது.
6. தொழிலை அடுத்த வளர்ச்சி நிலைக்கு கொண்டு செல்வோர் தங்களின் தொழிலை விரிவுபடுத்திக் கொள்ளவும் முத்ரா வங்கி கடன்களை வழங்குகிறது.

**45.அ) கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி. (ஏதேனும் 5)**

பின்வரும் விவரங்கள் கூட்டாண்மையை பதிவு செய்யும் அம்சங்களாகும்.

1. நிறுவனத்தின் பெயர்
2. வணிகத்தின் தலைமையிடம்.
3. பிற இடங்களில் அமைந்திருக்கும் தொழிலின் கிளை நிறுவனங்களின் முழு விவரம்
4. அனைத்துக் கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
5. ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மையில் சேர்ந்த நாள்
6. கூட்டாண்மையின் காலம்

மேற்காணும் அறிக்கையைத் தயார் செய்து அனைத்துக் கூட்டாளிகளும் கையொப்பமிட்டு பதிவாளரிடம் பதிவுக் கட்டணம் ₹ 3 செலுத்தி சமர்ப்பிக்க வேண்டும். மேற்காணும் அறிக்கையில் மாற்றம் செய்ய விரும்பினால் பதிவாளரிடம் 14 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும்.

**(அல்லது)**

**ஆ) பெரு நிறுவன ஆளுகையின் நன்மைகள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.**

1. நல்ல பெரு நிறுவன ஆளுகை மூலம் நிறுவனத்தின் வெற்றியை உறுதி செய்ய மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த இயலும்.
2. தொழில் அமைப்புகளின் நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்துகிறது.
3. பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களைச் சீரமைத்தல்.
4. முதலீட்டாளர்களின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் முதலீட்டை அதிகரிக்க செய்தல்.
5. நிறுமங்களுக்கான மூலதனச் செலவினை குறைக்கின்றன.
6. பங்கு விலையின் மீது நேர்மறை தாக்கத்தைக் கொண்டுள்ளது.
7. தொழில் நெறிமுறைகளை வலுப்படுத்துகிறது.

**46. அ) பன்னாட்டு நிறுமத்தின் தீமைகளை விவரி.(ஏதேனும் 5)**

**1. உள்ளூர்த் தொழில்களுக்கு அபாயம்:**
பன்னாட்டு நிறுவனங்களின் மிகப்பெரிய பொருளாதார சக்தி, உள்நாட்டு தொழில்களின் முன்னேற்றத்திற்கு தடையை ஏற்படுத்துகின்றது. பல உள்நாட்டு நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனங்களால் அழிக்கப்படுகின்றன.

**2. வழக்கொழிந்த தொழில்நுட்பத்தை மாற்றுதல்:**
வழக்கொழிந்த தொழில்நுட்பத்தை வளரும் நாடுகளுக்கு மாற்றுவதன் மூலம் இந்த நாடுகளின் தொழில் முன்னேற்றம் ஏற்படும் என்ற வாதம் தவறானவை என வாதிடப்படுகிறது.

**3. ஏழை மக்களுக்கு நன்மையில்லை:**
பணக்காரர்களால் மட்டுமே பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களை வாங்க முடிகிறது. ஏழை மக்களுக்கு இந்நிறுவனங்களால் எந்த பயனும் இல்லை என எதிர்ப்பாளர்கள் குரல் எழுப்புகின்றனர்.

**4. தனி மனித சுதந்திரத்திற்கு அபாயம்:**

பன்னாட்டு நிறுவனங்கள் ஒரு தனிமனித சுதந்திரத்தின் பாதிப்பை ஏற்படுத்தும்படி நடந்து கொள்ளும்.

**5. உள்நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பு இழப்பு:**

உள்நாட்டு மக்களுக்காகக் கணிசமான அளவில் வேலை வாய்ப்பையும் பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்குவதில்லை என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

**6. இயற்கை வளங்களை சுயநலத்திற்குப் பயன்படுத்துதல்:**

பன்னாட்டு நிறுவனங்கள் உள்நாட்டு இயற்கை வளங்களைத் தன் சுயநலத்திற்காகத் தவறாகப் பயன்படுத்துகின்றனர்.

**(அல்லது)**

**ஆ) உரிமையாளர்கள் முறை அடிப்படையில் வங்கிகளை வகைப்படுத்துக.**

**1. அரசு அல்லது பொதுத்துறை வங்கிகள்:**

எந்த ஒரு வங்கியின் பங்குகளில் 51 சதவிகிதத்திற்கும் குறைவில்லாத பங்குகளை அரசு பெற்றிருந்தால் அது அரசு வங்கிகள் அல்லது பொதுத்துறை வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு 1. பாரத ஸ்டேட் வங்கி (SBI)
2. இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI)

**2. பொதுக்கூட்டுரு வங்கிகள்:**

பாராளுமன்றத்தின் தனி சட்டத்தால் உருவாக்கப்பட்டு இந்திய அரசுக்கு முழு சொந்தமாக உள்ளன. எடுத்துக்காட்டு: 1. IFCI, 2. SIDBI 3. EXIM வங்கி

**3. தனியார் துறை வங்கிகள்:**

தனி நபர்களுக்கு சொந்தமான அனைத்து வங்கி நிறுவனங்களும் தனியார் துறை வணிக வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு: 1. லட்சுமி விலாஸ் வங்கி 2. கரூர் வைஸ்யா வங்கி
3. கோடக் மகேந்திரா வங்கி

**47. அ) தொழில், சிறப்பு தொழில் மற்றும் வேலைவாய்ப்பு ஓர் ஒப்பீடு செய்க.**
**(ஏதேனும்5)**

| வ. எண் | அடிப்படை | தொழில் | சிறப்புத் தொழில் | வேலைவாய்ப்பு |
|---|---|---|---|---|
| 1. | **பணியின் தன்மை** | சரக்கு மற்றும் சேவையைப் பொதுமக்களுக்கு அளித்தல் | சிறப்புத் தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல் | பணியாளர்களுக்கு வழங்கிய செயலைச் செய்தல் |
| 2. | **தகுதி** | குறைந்தபட்ச தகுதி என்று ஏதுமில்லை | குறிப்பிட்ட பிரிவில் சிறப்பு தகுதியும் / பயிற்சியும் பெறுதல் | குறைந்தபட்ச தகுதி தேவையில்லை |
| 3. | **மூலதனம்** | நிறுவனத்தின் அளவைப் பொறுத்து மூலதன அளவு மாறும் | இதை உருவாக்க வரையறுக்கப்பட்ட நிதி தேவைப்படும் | மூலதனம் ஏதும் தேவையில்லை |
| 4. | **வெகுமதி** | இலாபம் | தொழில் முறைக் கட்டணம் | கூலி / சம்பளம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | **இடர்** | இலாபம் நிச்சயமான மற்றும் நிச்சயமற்றதாகும். | கட்டணம் நிச்சயமானது மற்றும் நிலையானது | நிலையான கூலி / சம்பளம் இடர் ஏதும் இல்லை. |
| 6. | **உரிமை மாற்றம்** | நடைமுறைகளைப் பின்பற்றி உரிமை மாற்றம் செய்யப்படும். | உரிமை மாற்றம் செய்ய இயலாது. | உரிமை மாற்றம் செய்ய முடியாது. |

(அல்லது)

ஆ) **ஏட்டுக்கடன் முகமைக்கும் பன்னாட்டு ஏட்டுக்கடன் முகமைக்கும் இடையிலான வேறுபாடுகளை எழுதுக**.

| வ. எண் | அடிப்படை பண்புகள் | ஏட்டுக்கடன் முகமை | பன்னாட்டு ஏட்டுக்கடன் முகமை |
|---|---|---|---|
| 1. | நிதிக்கான அடிப்படை | ஏற்றுமதியின் கடன் தரத்தின் அடிப்படையில் நிதிச் சேவை வழங்கப்படுகிறது | வங்கியின் நிதித் தரத்தைப் பயன்படுத்தும் அளவின் அடிப்படையில் நிதிச் சேவை வழங்கப்படுகிறது. |
| 2. | கட்டணம் (அ) செலவு | சரக்கை விற்பவர் நிதிச் சேவைக் கட்டணத்தை ஏற்றுக் கொள்கிறார் | அயல்நாட்டுக் கடனாளி நிதிச் சேவைக் கட்டணத்தை ஏற்றுக் கொள்கிறார் |
| 3. | பொருந்தும் காலம் | குறுகிய கால முதிர்வுக் கொண்டநடவடிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும் | மத்திய கால முதிர்வு கொண்டநடவடிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும் |
| 4. | நிதியின் அளவு | பெறுதல்களின் மதிப்பில் ஒரு குறிப்பிட்ட (அதிக அளவாக 80 விழுக்காடு) சதவீதம் மட்டுமே பேராளனாள் நிதி வகைப்படுகிறது. | பெறுதல்களின் மதிப்பு முழுவதும் (100 விழுக்காடு) பேராளன் நிதி வழங்கப்படுகிறது. |
| 5. | இடர் ஏற்றல் | நிதிச் சேவையில் ஏற்படும் இடர்களை விற்பனையாளருக்கு மாற்றிவிட இயலும். | அனைத்து இடர்களையும் அயல்நாட்டு நிதி தரகு செய்யும் பேராளனே ஏற்றுக்கொள்கிறார். |

***குறிப்பு : இது எமது உத்தேச விடைக்குறிப்புகள் ஆகும். அரசு தேர்வுத் துறையினரால் வெளியிடப்படும் விடைக்குறிப்பே இறுதியானது.***

***தயாரிப்பு :*** **இல.பன்னீர்செல்வம்,M.Com.,B.Ed.,M.Phil.,SET.,
முதுகலை ஆசிரியர் (வணிகவியல்),
அரசு மேல்நிலைப்பள்ளி, நெடுங்கல்.
கிருஷ்ணகிரி மாவட்டம்.
கைபேசி எண். 8778305728.**